[8th December 1961

THE HON. SRI C. SUBRAMANIAM : அது பஞ்சாயத்துக்கு பொருந்துமே தவிர அசெம்பிளிக்கு பொருந்தாது. அசெம்பிளி கட்சி அடிப்படையில் நடந்து வருகிறது. கட்சி அடிப்படையில் அசெம்பிளி நடப்பது அவசியமாக இருக்கிறது. பஞ்சாயத்துக்கள் அப்படி இல்லை. அதனால் இங்கு அப்படி இருப்பது அவசியம் இல்லை. இங்கும் அந்தக் கொள்கையைக் கடைப்பிடித்தால் அப்படி இங்கு விட்டுக் கொடுக்க எவ்வளவோ பேர்கள் தயாராக இருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

Water level in Wells

* **2201 *Q.*—SRI S. M. ANNAMALAI :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) மின்சார உபயோகத்தினால் கிணறுகளின் நீர்மட்டங் கள் குறைந்து விட்டதை சர்வே செய்யும் உத்தேசமுண்டா ?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) No. Sir.

(ஆ) Does not arise.

Tuberculosis and Leprosy patients (Surgical treatment)

* **2202 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN :** கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) T. B., Leprosy போன்ற தொத்து வியாதியஸ்தர் களுக்குக் கட்டாய அறுவை சிகிச்சை கொடுக்கும் உத்தேச முண்டா ?

(இ) இப்போது நமது ராஜ்யத்தில் மேற்கண்ட வியாதியஸ் தர்கள் எவ்வளவு பேர்கள் என்று கணக்கு எடுக்கப்பட் டுள்ளதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) & (இ) No Sir, நோயாளிகளின் புள்ளி விவரம் கேட்கப்பட்டிருக்கிறது. 1960-ம் ஆண்டில் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கையாவது :

ட்யூபர்க்லோஸிஸ்	109,881
லெப்ரஸி	48,793

SRI V. K. KOTHANDARAMAN : பத்திரிகையிலே மத்திய சர்க்கார் வெளியிட்ட புள்ளிவிவரப்படி, இந்தியாவில் ட்யூபர்க்லோஸிஸ், லெப்ரஸி நோய்களினால் பாதிக்கப்பட்டவர்கள் ஏறக்குறைய ஒரு கோடி பேர்கள் என்று தெரிகிறது. இந்த ராஜ்யத்தில் மட்டும் ஐந்து லட்சம் பேர்கள் ட்யூபர்க்லோஸிஸ்

8th December 1961]

நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களுடைய நோக்கம் ஒரு லட்சம் பேருக்காவது அறுவை சிகிச்சை கொடுக்கவேண்டுமென்று நினைக்கிறேன். ட்யூபர்க்லோஸிஸ், லெப்ரஸி ஆஸ்பத்திரிகள் போதுமான எண்ணிக்கை இல்லாததால், நோய்கள் பரவாமல் தடுப்பதற்காக வேண்டி, அறுவை சிகிச்சை ஏன் அளிக்கக்கூடாது?

THE HON. SRI M. A. MANICKAVELU : நான் கொடுத்த புள்ளிவிவரம் அறுவை சிகிச்சை பற்றியது அல்ல. சாதாரண சிகிச்சையைப் பற்றியது. அறுவை சிகிச்சை என்பது வேறு விஷயம். கனம் அங்கத்தினர் ஏதோ ஒன்றை மனதில் வைத்துக் கொண்டு குழப்பிக் கொள்கிறார்.

SRI K. VINAYAKAM : If the patients suffering from leprosy and tuberculosis are permitted to procreate, the disease is likely to go to the generations that come after them. Would the Government take steps, apart from surgical treatment to the patients, to devise some method so as to stop the procreative functions of the lepers and persons suffering from tuberculosis?

THE HON. SRI M. A. MANICKAVELU : Luckily this disease is not transmitted through the process that the hon. Member mentions. It is only by contact.

SRI S. M. ANNAMALAI : ட்யூபர்க்லோஸிஸ் நோயானது அதிகமாகப் பரவிக்கொண்டிருக்கிறதென்றும், அதனால் அதிகமான பேர்கள் செத்துக்கொண்டு வருகிறார்கள் என்றும் அமைச்சர் அவர்கள் சமீபத்தில் பேசியிருக்கிறார்கள். இந்த நோயைத் தடுப்பதற்குக் கம்பு, சோளம், கேழ்வரகுக் கூழ் சாப்பிடுவது பரிகாரமாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். இது அமைச்சராகக் கண்டுபிடித்த விஞ்ஞானமா? விஞ்ஞான பூர்வமாகக் கண்டுபிடிக்கப்பட்டதா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது விஞ்ஞானமும் இல்லை; வேறு ஒன்றும் இல்லை. இது வெறும் பகுத்தறிவு. தேக உடல் நிலை நன்றாக இருந்தால் வியாதியைத் தடுக்கக்கூடிய சக்தி தேகத்திலே ஏற்படுகிறது. வைத்தியர்கள் செய்வதும் அது தான். புதிதாகச் செய்துவிடுவது இல்லை. வியாதி வராமல் தடுக்கும் சக்தியை அதிகப்படுத்துவதுதான் முக்கியம்.

UNSTARRED QUESTIONS.

Seed Farms

551 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the cost of cultivation per acre and production per acre in the various State Seed Farms ;